**தணிகை பஞ்சாங்கம்** பாலு சரவண சர்மா
*பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின் னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென் னை 45, பாரத நாடு.



# பங்குனி மாத மடல் - கர வருடம் - 2012 Panguni Month Auspicious Dates and Explanation

**பங்குனி மாத பிறப்பு:**
திருக்கணிதப்படி 14.3.2012 புதன் காலை 10:49 வாக்கியப்படி 14.3.2012 புதன் காலை 10:05
**சித்திரை பிறப்பு:**
திருக்கணிதப்படி: 13.4.2012 வெள்ளி இரவு 7:18 வாக்கியப்படி 13.4.2012 வெள்ளி மாலை 5:48

## பங்குனி மாத சுப நாட்கள் விளக்கம்

**பங்குனி 1 புதன் 14.3.2012**
அதிகாலை 4:30 முதல் காலை 6:00 மட்டும் நன் று
கணபதி ஹோமம் செய்ய நன் று
**காருடையான் நோன் பு** காலை 9:30 மணி முதல்
காலை 10 மணி வரை

**பங்குனி 5 ஞாயிறு 18.3.2012**
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன் று
அனைத்து சுபங்களும் செய்யலாம்

**பங்குனி 10 வெள்ளி 23.3.2012 தெலுங்கு யுகாதி**
யுகாதி பண்டிகை கொண்டாட நல்ல நேரம்
காலை 6:20 முதல் 7:20 வரை சுக்கிர ஹோரை

**பங்குனி 12 ஞாயிறு 25.3.2012**
அதிகாலை முதல் மாலை 4:30 மணி வரை நன் று
அனைத்து சுபங்களும் செய்யலாம்

**பங்குனி 13 திங்கள் 26.3.2012 சுக்கில சதுர்த்தி**
அதிகாலை 4:00 முதல் காலை 5:30 மட்டும் நன் று
கணபதி ஹோமம் செய்ய நன் று

**பங்குனி 15 புதன் 28.3.2012**
அதிகாலை 4:30 முதல் காலை 6:00 மட்டும் நன் று
கணபதி ஹோமம் செய்ய நன் று

**பங்குனி 17 வெள்ளி 30.3.2012**
அதிகாலை 4:30 முதல் காலை 6:00 மட்டும் நன் று
கிரஹப்பிரவேசம், கணபதி ஹோமம் செய்ய நன் று

**பங்குனி 20 திங்கள் 2..4.2012**
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன் று
கிரஹப்பிரவேசம் உட்பட அனைத்து சுபங்களும் செய்ய நல்ல நாள்

**பங்குனி 22 புதன் 4.4.2012 வாஸ்து நாள்** (ஜோதிஷ கணித சாஸ்திர நூல் படி)
அதிகாலை முதல் காலை 8 மணி வரை நன் று
அனைத்து சுபங்களும் செய்யலாம்

**வாஸ்து நேரம் காலை 9:14 முதல் 10:44 வரை**
முக்கியமான நேரம்: 10:08 முதல் 10:44 வரை

**பங்குனி 26 ஞாயிறு 8.4.2012 சுபநாள்**
அதிகாலை முதல் மாலை 7 மணிவரை நன் று
கிரஹப்பிரவேசம் உட்பட அனைத்து சுபங்களும் செய்யலாம்

**பங்குனி 27 திங்கள் 9.4.2012**
மாலை 4:30 மணி முதல் இரவு 10 மணி வரை நன் று
மஞ்சள் நீராட்டுவிழா, நிச்சியதாம்பூலம் செய்ய நன் று

**பங்குனி 30 வியாழன் 12.4.2012**
அதிகாலை 4:30 முதல் காலை 6:00 மட்டும் நன் று
கிரஹப்பிரவேசம், கணபதி ஹோமம் செய்ய நன் று

பாலு சரவண சர்மா

## மாலை நேர சுப நாட்கள்: நிச்சியம், மஞ்சள் நீராட்டு விழா, நடன அரங்கேற்றம் Evening Auspicious time: Engagement, Puberty ceremony , Dance Program

| | | | | |
|---|---|---|---|---|
| 18.3.2012 | ஞாயிறு | 25.3.2012 | ஞாயிறு | மாலை 4:30 மணி வரை மட்டும் |
| 02.4.2012 | திங்கள் | 06.4.2012 | வெள்ளி | (நாட்டிய அரங்கேற்றம் மட்டும்) |
| 08.4.2012 | ஞாயிறு (மாலை 6 - 7 மட்டும்) | 09.4.2012 | திங்கள் | மாலை 4:30 மணிக்கு மேல் நன் று |

## கிரஹப்பிரவேச நாட்கள்: House warming Ceremony ( தெலுங்கர்கள் மற்றும் சந்திர பஞ்சாங்கத்தை கடைபிடிப்பவர்களுக்கு பங்குனி அமாவாசைக்கு பிறகு சித்திரை மாதம் கணக்காகும் எனவே அவர்கள் கிரஹப்பிரவேசத்தை செய்யலாம்)

| | | | |
|---|---|---|---|
| 25.3.2012 ஞாயிறு | 28.3.2012 புதன் | 30.3.2012 வெள்ளி | 2.4.2012 திங்கள் |
| 4.4.2012 புதன் | 8.4.2012 ஞாயிறு | 12.4.2012 வியாழன் | |

## முகூர்த்த நாட்கள் - Wedding and Auspicious Time

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| V | 01 | 14.3.2012புதன் | தேய்பிறை | சப்தமி | அனுஷம் | சித்த | 6.00 - 7.30 | மீனம் |
| TV | 05 | 18.3.2012 ஞாயிறு | தேய்பிறை | ஏகாதசி | உத்திராடம் | அமிர் | 6.00 - 7.30 | மீனம் |
| V | 08 | 21.3.2012 புதன் | தேய்பிறை | சதுர்தசி | சதயம் | சித்த | 6.00 - 7.30 | மீனம் |
| TV | 12 | 25.3.2012 ஞாயிறு | வளர்பிறை | திருதியை | அஸ்வினி | சித்த | 6.00 - 7.30 | மீனம் |
| TV | 26 | 08.4.2012 ஞாயிறு | வளர்பிறை | துவிதியை | சுவாதி | சித்த | 7.00 - 9.00 | மேஷம் |
| V | 30 | 12.4.2012 வியாழன் | வளர்பிறை | சஷ்டி | மூலம் | சித்த | 7.30 - 8.35 | மேஷம் |

## விசேஷ நாட்கள்: Monthly Event

★அமாவாசை: 22.3.2012 வியாழன்
★பௌர்ணமி: 6.4.2012 வெள்ளி
★சுக்கில சதுர்த்தி: 26.3.2012 திங்கள்
★சங்கடஹர சதுர்த்தி: 9.4.2012 திங்கள்
★சுக்கில ஷஷ்டி: 28 & 29.3.2012
★கிருத்திகை: 27.3.2012 செவ்வாய்
★சுக்கில ஏகாதசி: 3.4.2012 செவ்வாய்
★கிருஷ்ண ஏகாதசி: 18.3.2012 ஞாயிறு
★**ஸ்ரீராம நவமி: 1.4.2012 ஞாயிறு**
★கிருஷ்ண பிரதோஷம்: 19.3.2012 திங்கள் (சில இடங்களில் 20.3.2012 செவ்வாய்)
★சிவராத்திரி: 20.3.212 செவ்வாய்
★சுக்கில பிரதோஷம்: 4.4.2012 புதன்

**★ காருடையான் நோன் பு:14.3.2012 புதன் ★பங்குனி உத்திரம்: 5.4.2012 வியாழன் ★யுகாதி: 23.3.2012 வெள்ளி**

## வானியல் தகவல் Astronomical phenomenon

| March தேதி, நேரம் | | |
|---|---|---|
| 14 6 | Venus 3.0N of Jupiter | சுக்கிரன் குருவிற்கு அருகில் |
| 14 13 | Moon furthest South (-22.1) | சந்திரன் மீதென் புல நிலை |
| 20 5 | Equinox | சமநாள்(பகல் இரவு காலம் சமமான நாள்) |
| 21 19 | Mercury inferior conjunction | புதன் சூரிய சேர்க்கை( புதன் அஸ்தமனம்) |
| 22 11 | Mercury 1.5S of Moon | புதன் சந்திரன் அருகில் |
| 22 14 | NEW MOON | அமாவாசை |
| 25 22 | Jupiter 3.1S of Moon | சந்திரன் அருகில் குரு |
| 26 5 | Moon at apogee | சந்திரன் தொலைவு நிலை |
| 26 19 | Venus 1.8N of Moon | சுக்கிரன் சந்திரன் அருகில் |
| 27 6 | Venus greatest elong E(46) | சுக்கிரன் 46 பாகை மீ உயர்வு நிலை |
| 28 6 | Aldebaran 5.2S of Moon | ரோகினி நட்சத்திரத்தின் அருகில் சந்திரன் |
| 28 23 | Moon furthest North (22.0) | சந்திரன் மீவட புல நிலை |

| April தேதி, நேரம் | | |
|---|---|---|
| 3 6 | Mercury stationary | புதன் நிலைப்பு நிலையில் |
| 3 13 | Regulus 5.5N of Moon | மகம் நட்சத்திரத்தின் அருகில் சந்திரன் |
| 6 19 | FULL MOON | முழுநிலவு |
| 7 5 | Spica 1.4N of Moon | சித்திரை நட்சத்திரத்தின் அருகில் சந்திரன் |
| 7 10 | Saturn 6.0N of Moon | சனி கிரகத்தின் அருகில் சந்திரன் |
| 7 16 | Moon at perigee | சந்திரன் அன்மைநிலை |
| 10 7 | Antares 4.8S of Moon | கேட்டை அருகில் சந்திரன் |
| 10 21 | Moon furthest South (-21.9) | சந்திரன் மீதென் புல நிலை |

### சமநாள் Equinox

பூமத்திரேகை பகுதியில் மார்ச் மாதம்(Vernal equinox), மற்றும் செப்டம்பர் மாதத்தில் (autumnal equinox) இரவும் பகலும் சமமாக உள்ள சமநாள் என்றும் மார்ச் மாத சமநாள் (Vernal equinox) வசந்தகால சம்பத்து என்றும் அழைக்கப்படுகிறது இந்த சந்திப்புக்காலமே வருடபிறப்பின் முக்கிய அம்சமாகும்.

இந்தியாவில் சித்திரை நட்சத்திரத்தை (நேர் எதிரில் சூரியன் அஸ்வினி நட்சத்திரத்தில் இருக்கும்) துவக்கப்புள்ளியாக (sidereal vernal equinox) பாவித்து மீண்டும் தலைக்கு மேல் வரும் காலமே புதுவருட துவக்கம் என்று அழைக்கப்படுகிறது. நட்சத்திர பின்னணியில் வருடமானத்தை கணக்கிடும் முறைதான் இந்திய முறை

அயனாம்ச வேறுபாடு நீக்கினால் புவிமைய பூமத்திரேகை சூரிய பாதையின் பாகை கிடைக்கும்

வசந்த கால சமநாள் முதல் அடுத்த வசந்தகால சமநாள் வரை ஒரு வருடமாக கணக்கிட்டு அதை கடைபிடிக்கும் முறைதான் இந்திய அரசின் அதிகாரபூர்வமான சக ஆண்டு ஆகும். இது முற்றிலும் அறிவியல் அடிப்படையிலானது மிகவும் துல்லியமானது.

இருப்பினும் இந்தியாவில் பண்டிகைகள், நாள்காட்டிகள் அயனாம்ச நிலையை கூட்டி (அல்லது கழித்து) கிடைக்கும் சூரியகிரக நிலையை அடிப்படை அம்சமாக கருதுகிறார்கள்.

**திருக்கணித, வாக்கிய பஞ்சாங்கத்திற்கு இடைய உள்ள வேறுபாடுகளுக்கு இந்த வசந்த சம்பத்து புள்ளியை கணக்கிடும் வழியே மிக முக்கியமான காரணியாகும்.**

இந்த ஆண்டு சமநாள் வருடம் துவக்கம் 20.3.2012 UTC 05:14

## சித்திரை மாதம் - நந்தன வருஷம் (13.4.2012 - 13.5.2012) சுப முகூர்த்த நாட்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 03 | 15.04.2012 | ஞாயிறு | தேய் | தசமி | திருவோணம் | அமிர் | மிதுனம் | 09.00 - 10.30 |
| 04 | 16.04.2012 | திங்கள் | தேய் | தசமி | அவிட்டம் | சித்த | மேஷம் | 06.00 - 07.30 |
| 04 | 16.04.2012 | திங்கள் | தேய் | ஏகாதசி | அவிட்டம் | சித்த | மிதுனம் | 09.30 - 10.30 |
| 07 | 19.04.2012 | வியாழன் | தேய் | சதுர்தசி | உத்திரட்டாதி | சித்த | மிதுனம் | 10.00 - 11.00 |
| 13 | 25.04.2012 | புதன் | வளர் | சதுர்த்தி | மிருகசீருஷம் | சித்த | மிதுனம் | 09.00 - 10.30 |
| 21 | 03.05.2012 | வியாழன் | வளர் | துவாதசி | ஹஸ்தம் | சித்த | கடகம் | 11.00 - 12.00 |
| 22 | 04.05.2012 | வெள்ளி | வளர் | திரியோதசி | ஹஸ்தம் | சித்த | ரிஷபம் | 07.00 - 08.00 |
| 25 | 07.05.2012 | திங்கள் | தேய் | துவதியை | அனுஷம் | சித்த | மிதுனம் | 09.00 - 10.30 |
| 29 | 11.05.2012 | வெள்ளி | தேய் | சஷ்டி | உத்திராடம் | சித்த | மிதுனம் | 08.30 - 10.00 |

## வெள்ளி 23.3.2012 - Telugu New Year - தெலுங்கு யுகாதி - விளக்கம்



தெலுங்கு வருட பிறப்பு சந்திரனின் சுழற்ச்சி மற்றும் சூரிய மாதத்தை(Luni - Solar) அடிப்படையாக கொண்டது. அமாவாசை முடிவு முதல் அடுத்த அமாவாசை முடிவு வரை ஒரு சந்திரமாதம் என்று அழைக்கப்படுகிறது. இந்தமுறை பஞ்சாங்கம் வட இந்தியா, கர்நாடகா, ஆந்திரா பகுதியில் கடைபிடிக்கப்படுகிறது. சந்திரன் பௌர்னமி அன்று சம்பந்தப்படும் நட்சத்திரத்தின் பெயரால் மாதங்கள் அழைக்கப்படும்

சந்திர மாதத்தின் அளவு(Synodic Lunar month ): சராசரி: 29 நாள் 12 மணி 44 நிமிடம்

சந்திர வருடத்தின் அளவு(Lunar Year): 354.3672 நாட்கள்

சூரிய வருடம்(Solar Year) - சந்திர வருட(Lunar Year) வேறுபாடு 10.89 நாள்

### அதிக மாதம் ஓர் விளக்கம்

எந்த சூரிய(சௌரமான)மாதத்தில் 2 அமாவாசைகள் வருகிறதோ அந்த சூரிய(சௌரமான) மாதத்திற்கு உள்வரும் சந்திரமாதம் அதிகமாதம் என்று அழைக்கப்படுகிறது. அதிகமாதத்தில் வரும் சந்திரமாதம் கணக்கில் கொள்ளாமல் அடுத்து வரும் சந்திரமாதம் **“நிஜமாதம்”** என்று அழைக்கப்படுகிறது.

வரும் 2012 **நந்தன** ஆண்டில் சௌரமான(சூரிய மாத) ஆவணி மாதத்தில் 2 அமாவாசைகள் வருவதால் அதில் வரும் “சந்திர மாதமான” பாத்ரபதம் மாதம் “**அதிக பாத்ரபதம்** ” என்றும் அடுத்து சூரிய மாதமான புரட்டாசியில் வரும் சந்திரமாதம் **“நிஜ பாத்ரபதம்”** என்றும் அழைக்கப்படும்.

19 வருடத்தில் 7 அதிக மாதம் வரும், சராசரியாக 2.7 வருடத்திற்கு ஒரு அதிகமாதம் வரும்

வருடத்திற்கு 10.89 நாள் மிகுதியாகும் சந்திரமாத வேறுபாட்டை “அதிக மாதம்” துணைக்கொண்டு சமன்படுத்துவதால், 19 வருடத்திற்கு ஒருமுறை சூரிய மாதமும், சந்திரமாதமும் சமன்படுத்தப்படுகிறது அதற்கான கணக்கீடு

19 சந்திர வருடங்கள் =19 × 12+7(அதிக மாதம்)×29.5306நாள்கள் = 6939.69 நாட்கள்

19சந்திர வருடங்கள் ×12சந்திர மாதங்கள் = 228 சந்திர மாதங்கள்

228 சந்திர மாதம் + 7 அதிகமாதம் = 235 சந்திர மாதங்கள்

235 சந்திர மாதம் × 29.5306 = 6939.69 சந்திர நாள்

ஒரு சூரிய வருடம் = 365.256363 நாட்கள். 19 சூரிய வருடங்கள்(19×365.256363) = 6939.87 சூரிய நாட்கள்

ஆக 19 வருடங்களுக்கு ஒரு முறை சந்திர, சூரிய வருடங்கள் சமமாக இருக்கும்

| அதிக மாதங்கள் |
|---|
| 2015 அதிக ஆஷாடம் |
| 2012 அதிக பாத்ரபதம் |
| 2010 அதிக வைசாகம் |
| 2007 அதிக ஜேஷ்டம் |
| 2004 அதிக சிராவணம் |

அனைவருக்கு யுகாதி புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் !

பாலு சரவண சர்மா. *புரோகிதர், ஜோதிடர், பஞ்சாங்க கணிதம்*

98403 69677 prohithar@gmail.com www.prohithar.com